**நிகழும் சோபகிருது வருடம் புரட்டாசி மாதம் 30 ஆம் நாள் (17.10.2023) செவ்வாய்கிழமை அன்று நாமக்கல் நகராட்சி நகர்மன்ற கூடத்தில் பிற்பகல் 4.45 மணிக்கு நடைபெற்ற அவசர கூட்டப் பொருள்**

**பொருள் எண்.1 :**

நாமக்கல் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.2 முதலைப்பட்டி பகுதியில் சர்வே எண்.306, 307இல் 12.90 ஏக்கர் பரப்பளவு கொண்ட இடத்தில் உட்கட்டமைப்பு மற்றும் அடிப்படை வசதிகள் (I&A) திட்டம் 2021–2022இன்கீழ் ரூ.19.50 கோடி மதிப்பீட்டில் புதிய பேருந்து நிலையம் கட்டும் பணி அனுமதிக்கப்பட்டு, தற்போது அனைத்து பணிகளும் முடிவுறும் நிலையில் உள்ளது. கடந்த 29.09.2023 அன்று மதிப்பிற்குரிய பாராளுமன்ற மாநிலங்களவை உறுப்பினர் திரு. கே.ஆர்.என். ராஜேஷ்குமார் மற்றும் மதிப்பிற்குரிய சட்டமன்ற உறுப்பினர் திரு. பி.இராமலிங்கம் ஆகியோர்களால் புதிய பேருந்து நிலைய பணிகள் நேரடியாக ஆய்வு செய்யப்பட்டது. அதனை தொடர்ந்து நாமக்கல் நகராட்சி நகர்மன்ற தலைவர் அவர்களின் 13.10.2023ம் தேதிய கடிதம் வாயிலாக புதிய பேருந்து நிலையத்திற்கு **டாக்டர் கலைஞர் நூற்றாண்டு பேருந்து நிலையம்** என பெயர் சூட்டி முகப்பில் அமைக்கப்படும் நுழைவு வாயிலில் **டாக்டர் கலைஞர் நூற்றாண்டு பேருந்து நிலையம்** என பெயர் பொருத்த அரசு அனுமதி பெற உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

எனவே முதலைப்பட்டி பகுதியில் புதியதாக அமைக்கப்பட்டு வரும் புதிய பேருந்து நிலையத்திற்கு **டாக்டர் கலைஞர் நூற்றாண்டு பேருந்து நிலையம்** என பெயர் சூட்டி முகப்பில் அமைக்கப்படும் நுழைவு வாயிலில் **டாக்டர் கலைஞர் நூற்றாண்டு பேருந்து நிலையம்** என பெயர் பொருத்த அரசின் அனுமதி பெற உரிய கருத்துரு சமர்ப்பிக்கவும், நுழைவு வாயிலினை அழகுப்படுத்த வடிவமைப்பு விவரங்களை பெற கலந்தாலோசகர் நியமித்து அதற்கான செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-** மன்றம் அனுமதிக்கலாம். **(ந.க. எண். 6402/2023/எப்1)**

**தீர்மானம் எண் : 615, அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண்.2 :**

நாமக்கல் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.2 முதலைப்பட்டி பகுதியில் சர்வே எண்.306, 307இல் 12.90 ஏக்கர் பரப்பளவு கொண்ட இடத்தில் உட்கட்டமைப்பு மற்றும் அடிப்படை வசதிகள் (I&A) திட்டம் 2021–2022இன்கீழ் ரூ.19.50 கோடி மதிப்பீட்டில் புதிய பேருந்து நிலையம் கட்டும் பணி அனுமதிக்கப்பட்டு, தற்போது அனைத்து பணிகளும் முடிவுறும் நிலையில் உள்ளது. கடந்த 29.09.2023 அன்று மதிப்பிற்குரிய பாராளுமன்ற மாநிலங்களவை உறுப்பினர் திரு. கே.ஆர்.என். ராஜேஷ்குமார் மற்றும் மதிப்பிற்குரிய சட்டமன்ற உறுப்பினர் திரு. பி.இராமலிங்கம் ஆகியோர் புதிய பேருந்து நிலைய பணிகளை நேரடியாக ஆய்வு செய்யப்பட்டது. அதனை தொடர்ந்து நாமக்கல் நகராட்சி நகர்மன்ற தலைவர் அவர்களின் 13.10.2023ம் தேதிய கடிதம் வாயிலாக நெடுஞ்சாலை துறையிடம் உரிய அனுமதி பெற்று தேசிய நெடுஞ்சாலையிலிருந்து (NH - 44) புதிய பேருந்து நிலையத்தினை இணைக்கும் வெளிப்புற வட்ட சாலை (Outer Ring Road) சந்திப்பில் ஒரு வரவேற்பு வளைவு அமைத்து அதற்கு **பேரறிஞர் அண்ணா நினைவு வளைவு** என பெயர் சூட்டவும், வெளிப்புற வட்ட சாலையிலிருந்து (Outer Ring Road) புதிய பேருந்து நிலையத்திற்கு செல்லும் 6 வழி அணுகு சாலையின் சந்திப்பில் ஒரு நினைவு வளைவு அமைத்து அதற்கு **பேராசிரியர் அன்பழகன் நினைவு வளைவு** என பெயர் சூட்ட அரசு அனுமதி பெற உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

எனவே மேற்கண்ட பகுதிகளில் நுழைவு வளைவுகள் அமைக்க நெடுஞ்சாலை துறையிடம் தடையின்மை சான்று பெறவும், நுழைவு வளைவுகளுக்கு **பேரறிஞர் அண்ணா நினைவு வளைவு** மற்றும் **பேராசிரியர் அன்பழகன் நினைவு வளைவு** என பெயர் சூட்ட உரிய அனுமதி பெற அரசிற்கு உரிய கருத்துரு சமர்ப்பிக்கவும், நுழைவு வளைவுகளை அமைக்க மேற்கொள்ளப்படும் செலவினத்தையும் மற்றும் நுழைவு வாயிலினை அழகுப்படுத்த வடிவமைப்பு விவரங்களை பெற கலந்தாலோசகர் நியமிக்க தேவைப்படும் செலவினத்தையும் நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-** மன்றம் அனுமதிக்கலாம். **(ந.க. எண். 6175/2023/எப்1)**

**தீர்மானம் எண் : 616, அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண்.3 :</u>**

முத்தமிழ் அறிஞர். டாக்டர். கலைஞர் அவர்களின் 8 அடி உயரம் (சிலையின் பாதம் முதல் தலை வரை) மற்றும் மேல்பகுதியில் 52 அங்குலமும் மார்பு பகுதியில் 36 அங்குலமும் அகலம் கொண்ட வெண்கலத்திலான முழு உருவ சிலையினை நாமக்கல் நகராட்சிக்குட்பட்ட செலம்பகவுண்டர் பூங்காவின் தென்மேற்கு மூலையில் 10 அடி உயர பீடத்தில் நிறுவுவதற்கு அரசாணை (நிலை) எண்.516 வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை (நில முடிவு அலகு, நில முடிவு 4(2) பிரிவு) நாள்.13.10.2023 வாயிலாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அரசாணை மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u> : மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம். **(ந.க. எண். 2630/2023/எப்1)**

**தீர்மானம் எண் : 617, பதிவு செய்யப்பட்டது.**

**ஆணையாளர்,**
**நாமக்கல் நகராட்சி.**